சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

ஆணை நாள் 05.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

•••••

வழக்கு எண். SA 16040/E/2025

திரு.R.சாமுவேல் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட சார் ஆய்வாளர்,
மாதவரம் வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
மாதவரம், சென்னை - 600 060.

******

ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.09.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி உத்தரவின்படி, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பெ.ரமேஷ்பாபு, வட்ட சார் ஆய்வாளர், மாதவரம் அவர்கள் இவ்வாணையத்தில் 05.11.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. இதற்கிடையில் மனுதாரர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 16.10.2026 தேதியிட்ட கடிதத்திலும் 31.10.2026 தேதியிட்ட கடிதத்திலும் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

3. மேற்படி மனுதாரரின் கடிதம் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பாக 11.09.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலரின் ந.க.எண்.CP/2026/E/001066/2026, நாள் 5.11.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் கோரும் பட்டா மாறுதல் கோப்பானது, பதிவரையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கப்பெறவில்லை என்ற தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

4. **எனவே, பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன் இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான ஆவணங்கள் இல்லாத பட்சத்தில், அதுகுறித்து <u>ஆணை உறுதி பிரமாண பத்திரத்தில் (Sworn Affidavit) மேற்படி தகவல் குறித்த ஆவணம் (ஆவணங்களை குறிப்பிட்டு) இல்லை</u> என்பதற்கான ஆணை உறுதி பிரமாண பத்திரத்தினை மனுதாரருக்கு தகவலாக வழங்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேற்படி தகவல்களை <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர்**

அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை இவ்வாணையத்தில் 20.11.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

5. மேலும், மனுதாரரின் 14.05.2025 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவிற்கு வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.செ.பிரகாசம் அவர்களின் 23.10.2026 தேதியிட்ட விளக்கக் கடிதத்திலும், அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் திரு.த.செந்தில்நாதன், அவர்களின் 22.10.2026 தேதியிட்ட விளக்கக் கடிதத்திலும், மாதவரம் வட்டத்தில் 2025-ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு பெருமளவு பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கோப்புகள் தயார் செய்து கணிணியில பதிவேற்றம் செய்திடும் பணியின் காரணமாகவும், இலவச வீட்டுமனைப்பட்டா தொடர்பான உட்பிரிவு பணிகளின் வேலைப்பளு காரணமாகவும், மனுதாரருக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல் வழங்க இயலவில்லை எனவும், இதுபோன்று இனிவரும் காலங்களில் நிகழாவண்ணம் நடந்து கொள்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

6. மேற்படி அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விளக்கத்தினை ஆணையம் ஏற்க மறுக்கிறது. எனவே, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.செ.பிரகாசம் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களை வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் மனுதாரருக்கு வழங்க தவறிய வகைக்கு <u>தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) தண்டம் விதித்து உத்தரவிடப்படுகிறது</u>. மேற்படி தொகையினை உரிய அரசு கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தி அதுகுறித்த எழுத்து மூலமான அறிக்கையினை இவ்வாணைத்தில், 20.11.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 16040/E/2025</u>
<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், மாதவரம், சென்னை - 600 060.

திரு.செ.பிரகாசம்,
அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,
(வழி- தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்)

<u>மேல்முறையீட்டாளர்</u>
திரு.R.சாமுவேல், த/பெ.T.ராஜரத்தினம்,
நெ.58B/2, கோபால்சாமி தெரு,
ராம்நகர், அம்பத்தூர், சென்னை-53.

பதிவாளர், தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை.
Copy to: File MP/PA,